


# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa

www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு

9597887847 / 8870884969

புதன், நவம்பர் 24.2021

மலர்:11 இதழ்:18

# முதல்–அமைச்சர் தலைமையில் முதலீட்டாளர்கள் மாநாடு

## ரூ.34,723 கோடியில் புரிந்துணர்வு ஒப்பந்தம்




முதல்—அமைச்சர் மு.க.ஸ்டாலின் கோவையில் 2 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். கோவை வ.உ.சி. மைதானத்தில் நடந்த விழாவில் 587,91 கோடி ரூபாய்க்கு முடிவுற்ற 70 திட்டங்களை, முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்து, 89.73 கோடி ரூபாய் மதிப்புக்கு, 128 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். பின், 25 ஆயிரத்து 123 பயனாளிகளுக்கு, 646.61 கோடி ரூபாய்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இந்நிலையில், கோவை கொடிசியா வளாகத்தில் முதல்—அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற தலைப்பில் முதலீட்டாளர்கள் மாநாடு தொடங்கியது. முதலீட்டாளர் மாநாட்டுக்கு முன்னதாக, விழாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியை முதல்—அமைச்சர் மு.க. ஸ்டாலின் பார்வையிட்டார். மாநாட்டில் பங்கேற்கும் நிறுவனங்கள் சார்பில் வைக்கப்பட்டிருக்கும் கண்காட்சியையும் அவர் பார்வையிட்டார். இந்த மாநாட்டில் முதல்—அமைச்சர் தலைமையில் 59 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. 13 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டன. 10 புதிய திட்டங்களை முதல்—அமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார். மொத்தம் ரூ.52,543 கோடி மதிப்பிலான பணிகள், திட்டங்கள் இதில் நிறைவேற்றப்பட்டன. தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, அரசு செயலர் கிருஷ்ணன், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத் தலைவர் பங்கஜ் குமார் பன்சல் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர். இந்த மாநாட்டில், ரூ34,723 கோடியில் 52 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் 74,835 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பணிகள் முடிக்கப்பட்ட 10 நிறுவனங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார். 3928கோடி ரூபாய் மதிப்பில் தொடங்கப்பட்டுள்ள இந்த நிறுவனங்கள் மூலம் 3,944 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்புள்ளது. 13,500 கோடி மதிப்பிலான 13 புதிய நிறுவனங்களுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டது. இதன் மூலம் 11,681 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல் வான்வெளி, பாதுகாப்பு துறை புரிந்துணர்வு ஒப்பந்தம் 7 நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்டது. 485 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவங்கப்படும் நிறுவனம் மூலம் 1960 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு நிதிநுட்பக்கொள்கை, தமிழ்நாடு ஒற்றைச் சாளர இணையதளம் 2.0 வின் கைப்பேசி செயலி ஆகியவையும் இன்றைய நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டன.

## சப்-இன்ஸ்பெக்டரை வெட்டிக்கொன்றது ஏன்? கைதான மணிகண்டன் பரபரப்பு வாக்குமூலம்



திருச்சி மாவட்டம், நாவல்பட்டு போலீஸ் நிலைய சிறப்பு சப்—இன்ஸ்பெக்டர் பூமிநாதன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கைதான மணிகண்டன் போலீசாரிடம் பரபரப்பு வாக்குமூலம் தெரிவித்துள்ளார். இது குறித்து போலீசார் கூறியதாவதுகைதான மணிகண்டன் ஆடுகளை திருடி விற்பனை செய்வதை வழக்கமாக கொண்டவர். ஆடுகளை சமயபுரம் ஆட்டுச்சந்தை உள்ளிட்ட சந்தைகளிலும், இறைச்சி கடைகளிலும் விற்று வந்துள்ளார். இதற்கு துணையாக உறவுமுறையான 14 வயது சிறுவனையும் அழைத்துக்கொண்டு சென்றுள்ளார். பல இடங்களில் திருடியும் இதுவரை அவர் போலீசாரிடம் சிக்காமல் இருந்துள்ளார். இந்த நிலையில் தான் சம்பவத்தன்று தோகூரில் ஒரு ஆட்டை திருடிக்கொண்டு மோட்டார் சைக்கிளில் மூன்று பேராக வந்துள்ளனர். அப்போது போலீசார் வழிமறித்தபோது வண்டியை நிறுத்தாமல் வேகமாக தப்பித்து சென்றிருக்கின்றனர். அதேநேரத்தில் வண்டியில் இருந்த 2 சிறுவர்களையும் ஆட்டை இறுக பிடித்துக்கொண்டு இருக்க கூறியிருக்கிறார். சுரங்கப்பாதையில் தண்ணீர் இருந்ததால் தப்பிச் செல்ல வழியில்லாமல் சிக்கிக்கொண்டனர். மணிகண்டனின் தாய்க்கு சப்—இன்ஸ்பெக்டர் பூமிநாதன் போன் செய்து தகவல் தெரிவித்ததால், கைதாகி சிறைக்கு சென்றுவிடுமோ? என மணிகண்டன் அச்சமடைந்துள்ளார். அப்போது தான் கல்லால் பூமிநாதனின் தலையில் தாக்கியும், மோட்டார் சைக்கிளில் வைத்திருந்த அரிவாளை எடுத்தும் அவரது தலை, கழுத்தில் பலமாக வெட்டியுள்ளார். இதில் ரத்த வெள்ளத்தில் அவர் சாய்ந்ததும் மற்ற 2 சிறுவர்களும் அதிர்ச்சியடைந்திருக்கின்றனர். கொலை செய்த உடன் அதே மோட்டார் சைக்கிளில் 3 பேரும் தப்பிச் சென்றனர். மணிகண்டனின் உறவினர் ஒருவர் இறந்த துக்க காரிய நிகழ்ச்சிக்கு செல்ல வேண்டி இருந்ததால் செலவுக்காக ஒரு ஆட்டை திருடியிருக்கின்றனர். அந்த ஆட்டை கீரனூர் பகுதியில் ஒருவரிடம் மணிகண்டன் விற்றிருக்கிறார். இவ்வாறு போலீசார் தெரிவித்தனர். மேற்கண்ட தகவலை அவர் வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதாக போலீசார் கூறினர். சிறப்பு சப்—இன்ஸ்பெக்டர் பூமிநாதன் கொலை வழக்கில் 3 பேர் கைது செய்யப்பட்டது குறித்து திருச்சி சரக டி. ஐ. ஜி. சரவண சுந்தர் கீரனூர் போலீஸ் நிலையத்தில் நேற்று மாலை நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:—சப்—இன்ஸ்பெக்டர் பூமிநாதன் கொலை வழக்கில் மணிகண்டன் வயது 19 மற்றும் 2 சிறுவர்களை கைது செய்து வழக்கில் சம்பந்தப்பட்ட ஆவணங்கள், பொருட்கள், அரிவாள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த சம்பவத்தில் மணிகண்டனோடு சேர்ந்து சிறுவர்களும் போலீசை தாக்கியுள்ளனர். சிறுவர்கள் மூவரும் சேர்ந்து சப்—இன்ஸ்பெக்டரை கொலை செய்ததாக கூறுவது நம்பும் படி இல்லை என அரசியல் வட்டாரத்தில் கூறுவதாக கேட்கிறீர்கள். இந்த கொலை சம்பவத்தை அரசியல் ரீதியாக பார்க்க கூடாது. சப்—இன்ஸ்பெக்டரின் உடல் பிரேத பரிசோதனையில் அவர் பின்னால் இருந்து தாக்கப்பட்டுள்ளார் என்பது உறுதியாகி உள்ளது. முன்பக்கமாக அரிவாளால் வெட்டும்படி சம்பவம் நடைபெறவில்லை. பிரேத பரிசோதனை அறிக்கையில் தெளிவாக உள்ளது. அவர் செல்போனில் பேசிக்கொண்டிருந்த போது எதிர்பாராத நேரத்தில் பின்னால் இருந்து அவர்கள் தாக்கியுள்ளனர். சப்—இன்ஸ்பெக்டரை பின்தொடர்ந்து வந்த ஏட்டுவின் வாகனம் பழுதாகவில்லை. வழி தெரியாமல் மாறி சென்றதால் அவர் வர தாமதமானது. அந்த இடைப்பட்ட நேரத்தில் சிறப்பு சப்—இன்ஸ்பெக்டரை அவர்கள் தாக்கியுள்ளனர். பூமிநாதன் செல்போனில் பல போலீசாருக்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்ததால் அந்த பயத்தினால் கூட அவர்கள் அவரை கொலை செய்திருக்கலாம். இந்த வழக்கில் கொலைக்கான தடயங்கள், அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும். இந்த கொலை சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மீது ஏற்கனவே வழக்குப்பதிவு எதுவும் இல்லை. எனினும், மணிகண்டன் போதைப்பொருள் பயன்படுத்தியதாக கூறப்படுகிறது. பொதுவாக இரவு நேர ரோந்து பணியின் போது போலீசார் 2 பேராக செல்ல வேண்டும். தங்களுடைய பாதுகாப்பையும் பார்த்துக்கொள்ள வேண்டும் என ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் இரவு நேர ரோந்து பணியில் ஈடுபடும் போலீசாருக்கு துப்பாக்கி கொடுப்பது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும். இந்த வழக்கில் சிறப்பாக செயல்பட்ட தனிப்படையினரை பாராட்டி டி. ஜி. பி. மூலம் நேரடியாக வெகுமதி வழங்கப்பட உள்ளது. இந்த வழக்கின் விசாரணை திருப்திகரமாக உள்ளது. கொலையாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை கிடைக்கும் வகையில் போதுமான ஆதாரங்கள் உள்ளன.

## கரோனா தடுப்பூசியைச் செலுத்த விரும்பாத ஆசிரியர்கள் வீட்டிலேயே இருந்து விடுங்கள் உயர்நீதிமன்றம் அதிரடி



கரோனா தடுப்பூசியைச் செலுத்த விரும்பாத ஆசிரியர்கள் பொதுநலன் கருதி வீட்டிலேயே இருந்து விடுங்கள் என்று சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது. அறம் அறக்கட்டளையின் தலைவரான ஏ.உமர்பாரூ சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில்,கல்வி நிறுவனங்களில் உள்ள பணியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு கரோனா தடுப்பூசியை கட்டாயமாக்கக் கூடாது என உத்தரவிடக் கோரியிருந்தார். இந்த மனு பொறுப்பு தலைமை நீதிபதி முனீஸ்வர் நாத் பண்டாரி மற்றும் நீதிபதி ஆதிகேசவலு அமர்வில் 22.11.2021 விசாரணைக்கு வந்தது. அப்போது, மாணவர்களின் நலன் கருதி ஆசிரியர்கள் தடுப்பூசி செலுத்துவது கட்டாயம் எனத் தெரிவித்த நீதிபதிகள், சொந்த காரணங்களுக்காகத் தடுப்பூசியைச் செலுத்த விருப்பப்படாத ஆசிரியர்கள் பொதுநலன் கருதி வீட்டிலேயே இருப்பது தான் சிறந்தது. மாணவர்களின் நலன் கருதியே அரசு இந்த உத்தரவு பிறப்பித்துள்ளது என்று குறிப்பிட்டனர். மேலும், பொதுநலனுக்கு எதிரான மனு என்றும் சுட்டிக்காட்டினர். இதையடுத்து, மனுவை வாபஸ் பெறுவதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டதால், வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.



## உயிரைப் பாதுகாத்துக்கொள்ள துப்பாக்கியை பயன்படுத்த தயங்கக் கூடாது

# போலீசாருக்கு டிஜிபி வலியுறுத்தல்




திருச்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடியற்காலை ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த எஸ்.ஐ.பூமிநாதன் ஆடு திருடர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். இந்நிலையில் படுகொலை செய்யப்பட்ட பூமிநாதனின் வீட்டிற்கு 23.11.2021 அன்று காலை சென்ற தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் சைலேந்திரபாபு, அவரது படத்திற்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து அவரது மனைவி கவிதா, மகன் குகன்பிரசாத் ஆகியோருக்கு ஆறுதல் கூறினார்.மேலும், ஐஜி பாலகிருஷ்ணன், டிஐஜி சரவண சுந்தர், மாநகர போலீஸ் கமிஷனர் கார்த்திகேயன், எஸ்.பி.சுஜித் ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். அஞ்சலி செலுத்திய பின்னர் டிஜிபி சைலேந்திரபாபு செய்தியாளர்களிடம் பேசியபோது, நூறு சதவீத ஆதாரத்தின் அடிப்படையில்தான் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆடு திருடிச் சென்றவர்கள் சிறுவர்கள் என்பதால் அவர்களுடன் பூமிநாதன் கனிவுடன் நடந்துகொண்டார். அவர்களை எச்சரிக்கும் நோக்கில் முக்கிய குற்றவாளியின் வீட்டிற்குத் தகவல் கொடுத்துள்ளார்.அந்த நேரத்தில்தான் கொலை செய்துள்ளனர் . . காவல்துறையினர் மீது கொலைவெறி தாக்குதல் நடத்தியவர்கள் மீது ஆயுதப் பிரயோகம் பண்ணலாம் என சட்டம் சொல்கிறது. தங்கள் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள துப்பாக்கியைப் பயன்படுத்த தயங்கக் கூடாது என்பதை வலியுறுத்துகிறேன். ரோந்து பணியில் ஈடுபடும் அதிகாரிகள் தற்காப்புடன் செயல்படவும், துப்பாக்கி எடுத்துச் செல்லவும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது, என்று கூறினார்.

## சூர்யாவிடம் பிரச்சனை செய்தால் அவர்கள் மீது பாம்பு விடுவோம்:பழங்குடியின மக்கள் கொதிப்பு




இயக்குநர் த.செ.ஞானவேல் இயக்கத்தில், நடிகர் சூர்யா நடிப்பில் உருவான ஜெய் பீம் திரைப்படம் கடந்த 2.ஆம் தேதி அமேசான் ப்ரைமில் வெளியானது. 90 களில் நடந்த உண்மை சம்பவத்தை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட இப்படம், ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. மேலும், தமிழ்நாடு முதல்வர், அரசியல் கட்சித் தலைவர்கள் எனப் பலரும் ஜெய் பீம் படத்தைப் பாராட்டினார்கள். இந்நிலையில் ஜெய் பீம் படத்தில் வன்னியர் சமூகத்தைத் தவறாகச் சித்தரித்துள்ளதாகக் கூறி வன்னியர் சங்கம் சார்பில் படக்குழுவினருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. மேலும், பாமக தரப்பு ஜெய் பீம் படத்திற்கு எதிராகக் கடுமையான எதிர்ப்பு தெரிவித்தது. இதனைக் கண்டித்து சூர்யாவுக்கு ஆதரவாகப் பலரும் அறிக்கை வெளியிட்டுவந்தனர். இதன் உச்சகட்டமாக பாமகவைச் சேர்ந்த மாவட்டச் செயலாளர் ஒருவர், நடிகர் சூர்யாவை எட்டி உதைத்தால் ஒரு லட்சம் தருவதாக கூறினார். இதனையடுத்து சூர்யா வீட்டிற்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது. இதற்கிடையே, அப்படத்தின் இயக்குநர் ஞானவேல், படத்தில் வந்த சில காட்சிகள் யாருக்காவது மன வருத்தத்தை ஏற்படுத்தியிருந்தால் வருத்தம் தெரிவிப்பதாக கூறியிருந்தார். இந்நிலையில், நடிகர் சூர்யாவுக்கு எதிராக ஏதாவது அசம்பாவிதங்கள் நடக்கும் பட்சத்தில் அவர்கள் மீது பாம்பைக் கொண்டு எறிவோம் என்று !ஜெய் பீம் படத்திற்கு ஆதரவாகப் போராட்டம் நடத்திய பழங்குடியின மக்கள் கூறியுள்ளனர் . போராட்டம் நடத்திய அவர்கள் கையில் பாம்பு, எலியுடன் வந்தது அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது.

## சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு பாராட்டு விழா!




2021 ஆம் ஆண்டு ஐபிஎல் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு பாராட்டு விழா 20.11.2021 அன்று மாலை 5.30 மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார். அதேபோல், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கேப்டன் மகேந்திர சிங் டோனி, ஐபிஎல் தலைவர் பிரிஜேஷ் படேல், பி. சி. சி. ஐ . யின் செயலாளர் ஜெய் ஷா, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் என். சீனிவாசன், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் கபில்தேவ் மற்றும் தமிழ்நாடு அமைச்சர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்விழாவில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் வீரர்களுக்கு பரிசுகளை வழங்கி முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் பாராட்டினார். மேலும், தமிழ்நாடு முதலமைச்சருக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் சார்பில் நினைவு பரிசு வழங்கப்பட்டது. அதேபோல், கேப்டன் மகேந்திர சிங் டோனிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் நினைவு பரிசு வழங்கினார்.

## கமல்ஹாசனுக்கு கரோனா தொற்று உறுதி!



நடிகர் கமல்ஹாசனுக்கு கரோனா பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. நடிகர் கமல்ஹாசனுக்கு கடந்த சில நாட்களாக இருமல் இருந்துவந்துள்ளது. இதனால் மருத்துவ பரிசோதனைக்காகப் போரூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அவர் உடல் பரிசோதனை செய்தார். அப்போது அவருக்கு கரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக அவர் தன்னுடைய ட்விட்டரில் தெரிவித்துள்ளதாவது, " அமெரிக்கப் பயணம் முடிந்து திரும்பிய பின் லேசான இருமல் இருந்தது. பரிசோதனை செய்ததில் கோவிட் தொற்று உறுதியானது. மருத்துவமனையில் தனிமைப்படுத்திக்கொண்டுள்ளேன். இன்னமும் நோய்ப்பரவல் நீங்கவில்லையென்பதை உணர்ந்து அனைவரும் பாதுகாப்பாக இருங்கள்" என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

விளம்பர தொடர்புக்கு
9597887847

அகர முதல
உரக்க சொல்வோம்
Aagaramuthalaa
தொடர்புக்கு
9597887847
8870884969
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு




# அகர முதல

Aagaramuthalaa | மின்னிதழ் | www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## தரங்கம்பாடி டேனிஷ் கோட்டையில் உலக மரபு சின்னங்கள் வாரவிழா

## மயிலாடுதுறை மாவட்டத்தில் மழை, வெள்ள பாதிப்புகளை மத்திய குழுவினர் ஆய்வு











மயிலாடுதுறை, நாகை மாவட்டங்களில் மழை, வெள்ள பாதிப்புகளை மத்திய குழுவினர் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். சேதம் அடைந்த நெற்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

நெற்பயிர்கள் சேதம் தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக நாகை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்தது. இந்த தொடர் மழையால் நாகை மாவட்டத்தில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் சம்பா, தாளடி நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. சேதமடைந்த பயிர்களை முதல்—அமைச்சர் மு. க. ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, துணை தலைவர் ஓ. பன்னீர்செல்வம் ஆகியோர் பார்வையிட்டு விவசாயிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்தனர். மத்திய குழுவினர் ஆய்வு இந்த நிலையில், மழை, வெள்ள பாதிப்புகளை பார்வையிட தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு குழுவை அனுப்பியது. மத்திய உள்துறை இணை செயலர் ராஜீவ் சர்மா தலைமையில், விஜய் ராஜ் மோகன், ரணஞ்ஜெய்சிங், வரபிரசாத் ஆகிய 4 பேர் கொண்ட மத்திய குழுவினர் நேற்று கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் பயிர் பாதிப்புகளை பார்வையிட்டனர்.

மயிலாடுதுறை மாவட்டம் புத்தூர் பகுதியில் மத்திய குழுவினர் பாதிக்கப்பட்ட பயிர்களை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். தொடர்ந்து மாவட்டம் முழுவதும் தொடர் மழையால் பாதிக்கப்பட்ட விளைநிலங்கள், பயிர்கள், வீடுகள் குறித்த புகைப்படங்கள் புத்தூர் அரசு தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது. அதனை மத்திய குழுவினர் பார்வையிட்டு விவரங்களை அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர். ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் நிவாரணம் அப்போது மத்திய குழுவினரிடம், விவசாயிகள் சங்க மாவட்ட குழு செயலாளர் வீரராஜ் ஒரு கோரிக்கை மனு கொடுத்தா அந்த மனுவில், மயிலாடுதுறை மாவட்டத்தில் 10 ஆயிரம் ஏக்கர் சம்பா பயிர் சேதம் அடைந்து விட்டது. எனவே ஏக்கர் ஒன்றுக்கு ரூ.30 ஆயிரம் வீதம் நிவாரணம் வழங்க வேண்டும். விவசாயிகள் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் வெள்ள நிவாரண தொகையாக ரூ.10 ஆயிரம் வீதம் வழங்க வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது. இந்த ஆய்வின் போது மத்திய குழுவுடன் தமிழக அரசின் வருவாய் நிர்வாக ஆணையர் பணீந்திரரெட்டி, மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் லலிதா, எம். எல். ஏக்கள் நிவேதா முருகன், பன்னீர்செல்வம், ராஜகுமார், கொள்ளிடம் ஒன்றியக்குழு தலைவர் ஜெயபிரகாஷ் மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள், விவசாயிகள் உடன் இருந்தனர். நாகை மாவட்டத்தில் ஆய்வு இதையடுத்து மத்திய குழுவினர் மாலை 4 மணியளவில் நாகை அருகே பாப்பாகோவில் ஊராட்சி, வடவூர் செல்லும் சாலை ஓரத்தில் உள்ள மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை பார்வையிட்டனர். தொடர்ந்து அங்குள்ள விவசாயிகளிடம் பாதிப்பு குறித்து கேட்டறிந்தனர். இதையடுத்து மாவட்ட நிர்வாகம் சார்பில் அங்கு மழையால் பாதிக்கப்பட்ட இடங்கள் குறித்து வைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்டனர். அப்போது நாகை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், பாதிப்புக்கள் குறித்த கோரிக்கைகள் அடங்கிய மனுவை மத்திய குழுவினரிடம் கொடுத்தனர். மனுவை பெற்றுக்கொண்ட மத்திய குழுவினர் திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் மழை சேதத்தை பார்வையிட சென்றனர். நாகை மாவட்ட கலெக்டர் அருண்தம்புராஜ், மீன்வளர்ச்சி கழக தலைவர் கவுதமன், நாகை மாலி எம். எல். ஏ., வேளாண்மை இணை இயக்குனர் பன்னீர்செல்வம் உள்ளிட்ட பல்வேறு அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### மயிலாடுதுறை: கொள்ளிடம் ஆற்றின் திட்டில் சிக்கிய

## 150 ஆடுகள் உட்பட 2 பேர் பத்திரமாக மீட்பு



தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை கடந்த மாதம் இறுதியில் துவங்கி தற்போது வரை பல்வேறு மாவட்டங்களில் கனமழை ஆக பதிவாகி வருகிறது. இந்த சூழலில் வடகிழக்கு பருவமழை காரணமாக மேட்டூர் அணையில் நீர் மட்டம் உயர்ந்ததை அடுத்து உபரி நீரானது தொடர்ந்து வெளியேற்றப்படுகிறது. அவ்வாறு வெளியேற்றப்படும் உபரி நீர் திருச்சி முக்கொம்பு அணைக்கு வந்து சேர்ந்தது. திருச்சி முக்கொம்பு அணையில் இருந்து உபரி நீரானது கொள்ளிடம் ஆற்றில் தொடர்ந்து திறந்து விடப்பட்டு வருகிறது. கொள்ளிடம் ஆறு ஆனது டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்காக பயன்பட்டு வருகிறது மேலும் வெள்ளப்பெருக்கின் போது சுமார்2 லட்சம் கன அடி வரை தண்ணீரை தாங்கும் தன்மை கொண்டதாகும். இந்நிலையில் கொள்ளிடத்தில் திறக்கப்பட்டுள்ள தண்ணீரானது தற்போது கரைபுரண்டு ஓடும் நிலையில் மயிலாடுதுறை மாவட்டம் சத்திரத்தை அடுத்த கொள்ளிடம் ஆற்றில் இரு கரையும் தொட்டு செல்கிறது. இந்த சூழலில் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா நாதல்படுகை கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றின் நடுவில் திட்டுப்பகுதி உள்ளது. இங்கு சில தினங்களுக்கு முன்பு அதே கிராமத்தை சேர்ந்த கணேசன் மற்றும் அவரது மனைவி காந்திமதி ஆகியோர் தங்களுக்கு சொந்தமான 150 ஆடுகளை மேய்ச்சலுக்காக விட்டு பாதுகாத்து வந்தனர். இந்நிலையில் திடீரென ஆற்றில் தண்ணீர் வரத்து பெருக்கெடுத்து திட்டு பகுதியை தண்ணீர் சூழ்ந்து கொண்தால் ஆடுகளுடன் தவித்து வந்தனர். இதனை அடுத்து தகவலறிந்த சீர்காழி கோட்டாட்சியர் நாராயணன் வட்டாட்சியர் சண்முகம் தலைமையில் காவல்துறையினர் மற்றும் தீயணைப்பு படை வீரர்கள் மூன்று படகுகள் மூலம் ஆற்றின் நடுவில் சிக்கி தவித்த கணேசன் மற்றும் அவரது மனைவி காந்திமதி மற்றும் அவர்களது 150 ஆடுகளையும் பாதுகாப்பாக மீட்டு நீண்ட போராட்டத்திற்குப் பிறகு பத்திரமாக மீட்டு கரை சேர்த்தனர். மேலும் நீர்வரத்து அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கபடுவதால் தாழ்வான பகுதியில் வசித்தவர்களை பாதுகாப்பாக தங்குவதற்காக அளக்குடி, அனுமந்தபுரம் மற்றும் ஆச்சாள்புரத்தில் நிவாரண முகாம்கள் அமைக்கபட்டுள்ளது. ஒரு சில வீடுகளை தண்ணீர் சூழ்ந்ததால் பாதிக்கபட்ட மக்கள் தற்போதே முகாம்களுக்கு வரத்தொடங்கியுள்ளனர். அவர்களுக்கு தேவையான உணவு குடிநீர் உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் மாவட்ட நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யபட்டுள்ளது.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

### செம்பனார்கோவில் அருகே பழங்குடினருக்கு ஆதார் அட்டை முகாமை

# ஆட்சியர் இரா.லலிதா துவக்கி வைத்தார்.



மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் அருகே பழங்குடினருக்கு ஆதார் அட்டை வழங்க புகைப்படம், கைரேகை பதிவு செய்யும் முகாமை ஆட்சியர் இரா.லலிதா சனிக்கிழமை தொடங்கி வைத்தார்.செம்பனார்கோவில் காவல் நிலையம் எதிரே தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான இடத்தில் பழங்குடி சமுதாயத்தைச் சேர்ந்த பூம்பூம் மாட்டுக்காரர் 103 பேர் 20 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருகின்றனர். அரசு பதிவேடுகளில் இவர்களின் பெயர்கள் இடம்பெறாததால் அரசின் சலுகைகளை பெறமுடியாத நிலையில் உள்ளனர். இதையறிந்த மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா, அவர்களுக்கு குடும்ப அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கும்படி தரங்கம்பாடி வருவாய் துறையினருக்கு உத்தரவிட்டார்

இதைத்தொடர்ந்து, குடும்ப அட்டை பெறுவதற்கு தேவைப்படும் ஆவணமான ஆதார் அட்டைகளை இப்பழங்குடியினருக்கு வழங்க சிறப்பு முகாம் செம்பனார்கோவிலை அடுத்த ஆறுபாதியில் நடைபெற்றது இம்முகாமுக்கு ஆட்சியர் இரா.லலிதா தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் முருகதாஸ் தரங்கம்பாடி வட்டாட்சியர் ஹரிதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்ட வழங்கல் அலுவலர் பாபு வரவேற்றார் இம்முகாமில் 103 பேர் ஆதார் அட்டை பெறுவதற்கான புகைப்படம் மற்றும் கைரேகை பதிவு செய்து ஒப்புகை சீட்டை பெற்று கொண்டனர் இதில் ஊராட்சித் தலைவர் தமிழரசி கலியபெருமாள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### மயிலாடுதுறை: அரசு வேலை வாங்கித் தருவதாக

# பல லட்சம் ரூபாய் மோசடி:தம்பதி கைது



நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுகா விக்ரமசிங்கபுரம் தெற்கு அகஸ்தியர்புரம் பகுதியை சேர்ந்த பிச்சைமணி மகன் அருண்குமார்(வயது36) இவருடைய மனைவி கிருஷ்ணகோகிலா(29) இவர்கள் இருவரும் அரசு வேலை வாங்கி தருவதாக மயிலாடுதுறையில் 7 பேரிடம் ரூ.14 லட்சம் வாங்கிக் கொண்டு தலைமறைவாகி விட்டதாக மயிலாடுதுறை போலீஸ் நிலையத்தில் திருவிழந்தூர் கே.கே. நகரை சேர்ந்த ராஜேந்திரன் மகன் சித்தார்த்(30)என்பவர் புகார் அளித்திருந்தார். இந்த புகார் குறித்து மயிலாடுதுறை போலீசார் விசாரணை மேற்கொண்டு வந்தனர். விசாரணையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை மயிலாடுதுறை கூறைநாடு பி அண்டு டி நகரில் வசித்து வந்த தம்பதியினர், கடந்த சில தினங்களுக்கு முன்பு திடீரென வீட்டை காலி செய்து விட்டு தப்பி ஓடி சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் தலைமறைவாக இருந்தது தெரியவந்தது. இதனையடுத்து மயிலாடுதுறை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுகுணாசிங் உத்தரவின்பேரில் போலீஸ் சப்—இன்ஸ்பெக்டர் இளையராஜா, சிறப்பு சப்—இன்ஸ்பெக்டர் ரமேஷ் தலைமையிலான தனிப்படை போலீசார் காரைக்குடி விரைந்து சென்றனர். காரைக்குடி அருணாசலம் தெருவில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கியிருந்த அருண்குமார், கிருஷ்ணாகோகிலா தம்பதியினரை தனிப்படை போலீசார் கைது செய்து, நேற்று மயிலாடுதுறைக்கு கொண்டு வந்து, விசாரணை மேற்கொண்டனர். சென்னையில் அருண்குமார் மீது ஏற்கனவே மோசடி வழக்கு உள்ளதாகவும், மயிலாடுதுறை மாவட்டத்தில் 17 பேரிடம் ரூ.38 லட்சம் வரை ஏமாற்றி உள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக போலீசார் தரப்பில் தெரிவித்துள்ளனர்.

# மயிலாடுதுறையில் மாவட்ட திமுக செயற்குழு கூட்டம்




மயிலாடுதுறை மாவட்டம் காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் அரங்கத்தில் மாவட்ட திமுக அவைத் தலைவர் சீனிவாசன் தலைமையில் நாகை வடக்கு மாவட்ட திமுக செயற்குழு பொது கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், தலைமை தேர்தல் பணிக்குழு செயலாளர் குத்தாலம் கல்யாணம், நாகை வடக்கு மாவட்ட திமுக துணை செயலாளர் ஞானவேலன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம், மாநில விவசாய அணி இணை செயலாளர் பால அருள்செல்வன், நகர செயலாளர் குண்டா மணி என்கிற செல்வராசு, ஒன்றிய செயலாளர்கள் மங்கை சங்கர், அப்துல்மாலிக், அன்பழகன், முருகப்பா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்எம் சித்திக், குத்தாலம் அன்பழகன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி அமைப்பாளர் ஸ்ரீதர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் திமுக நகர ஒன்றிய கிளை செயலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தரங்கம்பாடி டேனிஷ் கோட்டையில் உலக மரபு சின்னங்கள் வாரவிழா

# கட்டணமின்றி சுற்றுலாப் பயணிகள் பார்வையிடலாம்



மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி டேனிஷ் கோட்டையில் பாரம்பரிய உலக மரபு சின்னங்கள் பாதுகாப்பு வாரவிழாவை முன்னிட்டு தொல்லியல் துறை சார்பில் நவம்பர் 19 ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரை கட்டணமின்றி சுற்றுலா பயணிகள் மற்றும் மாணவர்கள் பார்வையிடலாம் . கி. பி.1600 முதல் 1634 வரை தரங்கம்பாடியை ஆட்சி செய்த டேனிஷ்காரர்கள்(டென்மார்க் நாட்டினர்)) 1620ல் கடற்கரைக்கு மேற்கே டேனிஷ் கலை நுணுக்கத்துடன் கோட்டையை கட்டி தங்களது அதிகார மையமாக பயன்படுத்தினர். 400 ஆண்டுகள் பழமையாகியும் இன்றும் கம்பீரமாய் காட்சியளிக்கும் இக்கோட்டையில் செயல்படும் அகழ்வைப்பகத்தில் 14,15,16 ஆம் நூற்றாண்டுகளில் டேனிஷ்காரர்கள், தமிழர்கள் பயன்டுத்திய பொருட்கள், 1200 ஆம் ஆண்டுகால சிலைகள், பீங்கான், மண், மரத்தாலான பல நூறு ஆண்டுகள் பழமையான பொருட்கள், டேனிஷ் அரசர்கள், ஆளுநர்களின் புகைப்படங்கள், டேனிஷ்கால பத்திரங்கள், போர்கருவிகள் 16 ஆம் நூற்றாண்டில் தரங்கம்பாடி வந்த கப்பல் ஒன்றின் உடைந்த பாகங்கள் , என ஏராளமான வரலாற்று சின்னங்களை பத்திரப்படுத்தி காட்சிக்கு வைத்துள்ளனர்.மேலும் கோட்டையின் தரைத்தளத்தில் சிறைச்சாலை, ஓய்வறைகள், பண்டகவைப்பறை, பீர், ஒயின் கிடங்கு அறைகளாக டேனிஷ் காலத்தில் பயன்படுத்தப்பட்ட அறைகளை பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. உலக மரபு சின்னங்கள் வார விழாவை முன்னிட்டு சனிக்கிழமை மாணவர்களுக்கு ஓவியப்போட்டி. கட்டுரைப் போட்டிகள் தெரசா பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இதில் 50க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர். தலைமையாசிரியர் அருட்சகோதரி செவிலி, தாளாளர் ஆரோக்கிய மேரி, தொல்லியல் துறை அலுவலர் வசந்தகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர். வரலாற்று சின்னங்கள் நிறைந்த இக்கோட்டையை நவம்பர் 19 ஆம் தேதி முதல் ஒரு வாரக்காலத்திற்கு எந்தவித கட்டணமுமின்றி பொதுமக்கள், மாணவர்கள், இளைஞர்கள் பார்வையிடலாம் என்று டேனிஷ் கோட்டை நிர்வாகம் அறிவித்துள்ளது. பார்வையிட வரும் சுற்றுலா பயணிகளுக்கு டேனிஷ் கோட்டை நிர்வாகம் கரோனா நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் விதமாக கிருமி நாசினி, தர்மாமீட்டர் பரிசோதனை செய்த பின்பு சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுகின்றனர்.

# மயிலாடுதுறையில் அரசு பஸ்சின் படிக்கட்டு திடீரென உடைந்து விழுந்தது




மயிலாடுதுறை பஸ் நிலையத்தில் இருந்து நேற்று காலை ஒரு அரசு பஸ் பயணிகளை ஏற்றிக்கொண்டு பொறையாறுக்கு புறப்பட்டு சென்றது. பஸ்சில் 90க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். மேலும் பஸ்சின் படிக்கட்டுகளில் கல்லூரி மாணவர்கள் தொங்கியபடி பயணம் செய்தனர். மயிலாடுதுறை கொத்தத்தெரு பெரிய மாரியம்மன் கோவில் அருகே தரங்கம்பாடி சாலையில் சென்றபோது பஸ்சின் பின்பக்க படிக்கட்டு திடீரென உடைந்து கீழே விழுந்தது. அப்போது சுதாரித்து கொண்ட மாணவர்கள் படியில் இருந்து மேலே ஏறிக்கொண்டனர். இதனால் எந்தவித காயமும் இன்றி மாணவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். படிக்கட்டு உடைந்தது தெரியாமல் பஸ்சை டிரைவர் ஓட்டி சென்றார். மாணவர்கள் சத்தம் போட்டதும் சத்தம் கேட்டு பஸ்சை டிரைவர் நிறுத்தினார். இதனைத்தொடர்ந்து பஸ்சில் இருந்து கண்டக்டர் கீழே இறங்கி உடைந்து கீழே கிடந்த படிக்கட்டை எடுத்து வந்தார் . பின்னர் அங்கிருந்து பஸ் புறப்பட்டு சென்றது. பயணிகளை ஏற்றிச்சென்ற பஸ்சில் இருந்து படிக்கட்டு உடைந்து விழுந்த சம்பவத்தால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. தினமும் காலை நேரத்தில் மாணவர்கள் பஸ்களில் தொங்கியபடி ஆபத்தான பயணம் மேற்கொண்டு வருகின்றனர். பஸ்சில் இருந்து மாணவர்கள் கீழே விழுந்து படுகாயம் அடையும் சம்பவங்களும் அதிகளவில் நடந்துள்ளன. எனவே காலை, மாலை என இரு வேளைகளிலும் கூடுதலாக பஸ்களை இயக்க வேண்டும். மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள அரசு போக்குவரத்துக்கழக பணிமனைகளில் உள்ள பஸ்களை அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அகர முதல
தொடர்புக்கு 9597887847 8870884969
Aagaramuthalaa
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு





# அகர முதல

Aagaramuthalaa

மின்னிதழ்

www.Aagaramuthalaa.com



விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969




# கடலூர் மாவட்ட செய்திகள்

## கடலூரில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் மத்திய குழு ஆய்வு

### கடலூரில் பல்லாயிரம் ஏக்கர் விளைநிலங்களில் ஆற்று மணலை நிரப்பி சென்ற தென்பெண்ணை ஆறு













கடலூர் மாவட்டத்தில் தொடர் மழை காரணமாகவும் தென்பெண்ணை ஆற்றில் கடந்த 19 ஆம்தேதி கடந்த 49 ஆண்டுகளில் இல்லாத வகையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அதாவது வினாடிக்கு 1 லட்சத்து 20 ஆயிரம் கனஅடி நீர் பெருக்கெடுத்து ஓடி கடலூர் வங்க கடலில் சங்கமித்தது. வெள்ளப்பெருக்கு காரணமாக பல்வேறு குடியிருப்புகளில் வெள்ளம் சூழ்ந்தது மேலும் சுமார் 5500 ஹெக்டர் பரப்பளவில் விவசாய நிலங்கள் முற்றிலுமாக நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளது. இதில் கடலூர், மேல்பட்டாம்பாக்கம், நெல்லிக்குப்பம் உள்ளிட்ட இடங்களில் தென்பெண்ணை ஆற்றங்கரையோரம் இருந்த குடியிருப்புகள், விளை நிலங்களுக்குள் வெள்ளம் புகுந்தது . சில கிராமங்கள் தீவுகளாகவே மாறியது. இதனை தமிழக அரசு ஏற்கனவே கணக்கெடுக்கும் பணிகள் நடத்தி வரும் நிலையில் மத்திய குழுவினர் கடலூர் வருகை தந்து உள்ளனர், உள்துறை இனை செயலர் ராஜுஷர்மா மத்திய வேளான்துறை இயக்குநர் விஜய்ராஜ்மோகன் மத்திய நெடுஞ்சாலை துறை மண்டல அலுவலர் ரன்ஜன்சிங் மத்திய ஊரகவளர்சசிதுறை செயலாளர் வரபிரசாத் ஆகியோர் தலைமையில் , கடலூர் பெரிய கங்கனாகுப்பம் பகுதியில் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும். மேலும் அங்கு அதிகாரிகளால் வைக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட புகைப்பட காட்சிகளையும் பார்வையிட்டனர் . மத்திய குழுவிற்கு மாவட்ட ஆட்சியர் பாலசுப்புரமணியம் பாதிப்புகள் குறித்து விளக்கினார். இதனை தொடர்ந்து கடலூர் மாவட்டம் புதுசத்திரம் அடுத்த பூவாளை கிராமத்தில் பாதிக்கப்பட்ட மக்களையும், மழை நீரால் சூழ்ந்த விவசாய நிலங்களை பாதிக்கப்பட்ட புகைப்பட கண்காட்சியை பார்வையிட உள்ளனர். கடலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களில் குடியிருப்புகள் வெள்ளம் சூழ்ந்ததால் மக்கள் கடுமையாக அவதிப்பட்டு உள்ளனர் மேலும் பல சாலைகள் முற்றிலுமாக சேதம் அடைந்துள்ளது பல்வேறு இடங்களில் விவசாய நிலங்கள் முற்றிலுமாக அழிந்து விட்டது இதனால் உடனடியாக கடலூர் மாவட்டத்தை நிரந்தர வெள்ளத்தடுப்பு பணிகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நிதியினை உயர்த்தி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என கடலூர் திமுக சட்டமன்ற உறுப்பினர் அய்யப்பன் மத்திய குழுவிடம் கோரிக்கை மனு அளித்தார். இதே போல் கடலூர் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கபட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 30 ஆயிரம் வழங்க வேண்டும் எனவும், வீடுகள் இழந்தவர்களுக்கு 50 ஆயிரம் வழங்க வேண்டும், மேலும் மழை நீர் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 ஆயிரம் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்.

தென்பெண்ணை ஆற்று வெள்ளத்தால் விளை நிலங்கள் மணல் திட்டுகளாக மாறி விட்டது. இதனால் வாழவழியின்றி நிர்கதியாக நிற்பதாக விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தென்பெண்ணை ஆற்றில் கடந்த 19 ஆம் தேதி கடந்த 49 ஆண்டுகளில் இல்லாத வகையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அதாவது வினாடிக்கு 1 லட்சத்து 20 ஆயிரம் கனஅடி நீர் பெருக்கெடுத்து ஓடி கடலூர் வங்க கடலில் சங்கமித்தது. இதில் கடலூர், மேல்பட்டாம்பாக்கம், நெல்லிக்குப்பம் உள்ளிட்ட இடங்களில் தென்பெண்ணை ஆற்றங்கரையோரம் இருந்த குடியிருப்புகள் , விளைநிலங்களுக்குள் வெள்ளம் புகுந்தது. சில கிராமங்கள் தீவுகளாகவே மாறியது. வாகன போக்குவரத்து, மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மேலும் 16 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெல், உளுந்து, மக்காச்சோளம் மற்றும் காய்கறி வகை பயிர்கள் தண்ணீரில் மூழ்கி உள்ளன. இந்த நிலையில் நேற்று முன்தினம் முதல் வெள்ளம் படிப்படியாக குறைய தொடங்கியது. இதனால் ஏற்பட்ட பாதிப்புகள் தற்போது வெளியே தெரிய தொடங்கி இருக்கிறது. இது பார்ப்பவர்களை கலங்க செய்யும் விதமாக அமைந்துள்ளது. வெள்ள பாதிப்பில் பயிர்கள் சேதமானதுடன், தங்களது விளை நிலங்களை மீட்டு வருவதற்கே பெருந்தொகை செலவாகும் என்கிற நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். பல இடங்களில் மின்கம்பங்களும் சாய்ந்து விழுந்து கிடக்கிறது. குறிப்பாக கடலூர் அடுத்த உச்சிமேடு, நாணமேடு, சுப உப்பலவாடி உள்ளிட்ட பல்வேறு கிராம பகுதிகளில் பயிரிடப்பட்டு இருந்த பயிர்கள் அனைத்தும் தடம் தெரியாமல் அழிந்து போய்விட்டது. வயல் முழுவதும் ஆற்று மணல் நிரம்பி மணல் திட்டுகளாக மாறி கிடக்கிறது. எனவே இதை மீண்டும் விளை நிலங்களாக எவ்வாறு மாற்றப்போகிறோம் என்று தெரியாமல் கண்கலங்கி நிற்கிறார்கள் இந்த பகுதி விவசாயிகள். இது குறித்து விவசாயி ஒருவர் கூறுகையில்,

இந்த பகுதிகளில் நெல் மற்றும் தினசரி வருவாய் தரும் சாமந்தி பூக்கள், கத்திரிக்காய், மிளகாய் வெண்டைக்காய் போன்ற காய்கறிகளை சாகுபடி செய்து வந்தோம். ஆனால் வெள்ளத்தில் அவை அனைத்தும் வேரோடு அடித்து செல்லப்பட்டு விட்டது. விளைநிலம் முழுவதும் மணல் திட்டுகளாக மாறி இருக்கிறது. இனி இதில் எங்களால் எப்படி விவசாயம் செய்ய முடியும். இதை மீண்டும் விளை நிலமாக மாற்றுவதற்கே பெரும் தொகை தேவைப்படும், தொகை இருந்தாலும் இங்கு உள்ள மணல் அனைத்தையும் எடுத்து விட்டாலும் நிலத்தின் தன்மை அதன் பிறகு எவ்வாறு இருக்கும் என்பதை கூற முடியாது ஆகவே நாங்கள் மீண்டும் பயிர் செய்ய பல மாதங்கள் ஆகக்கூடும், மாவட்ட நிர்வாகம் எங்களுக்கு முறையாக முன்னெச்சரிக்கை குத்திருந்தால் குறைந்த அளவு பயிர்களையாவது காப்பாற்றி இருப்போம் ஆனால் தென்பெண்ணை ஆற்று பெருவெள்ளம், எங்களை வாழவழியின்றி நிர்கதியாக்கிவிட்டது என்று வேதனை தெரிவித்தார்.


அகர முதல

Aagaramuthalaa

தொடர்புக்கு
9597887847
8870884969

aagaramuthala@gmail.com

டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

## பண்ருட்டி அருகே தேங்கி இருந்த மழை நீரில்

# மூழ்கி 2 வயது சிறுவன் உயிரிழப்பு





கடலூர் மாவட்டத்தில் தொடர் மழை காரணமாகவும் தென்பெண்ணை ஆற்றில் கடந்த 19 ஆம் தேதி கடந்த 49 ஆண்டுகளில் இல்லாத வகையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அதாவது வினாடிக்கு 1 லட்சத்து 20 ஆயிரம் கனஅடி நீர் பெருக்கெடுத்து ஓடி கடலூர் வங்க கடலில் சங்கமித்தது. வெள்ளப்பெருக்கு காரணமாக பல்வேறு குடியிருப்புகளில் வெள்ளம் சூழ்ந்தது மேலும் சுமார் 5500 ஹெக்டர் பரப்பளவில் விவசாய நிலங்கள் முற்றிலுமாக நீரில் மூழ்கி சேதமடைந்து உள்ளது. இதில் கடலூர் மேல்பட்டாம்பாக்கம், நெல்லிக்குப்பம் உள்ளிட்ட இடங்களில் தென்பெண்ணை குடியிருப்புகள், விளை நிலங்களுக்குள் வெள்ளம் புகுந்தது. சில கிராமங்கள் தீவுகளாகவே மாறியது. அதன் பின் தற்பொழுது தென்பெண்ணை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளம் படிப்படியாக குறைந்து வருகிறது , தற்பொழுது தென்பெண்ணை ஆற்றில் வினாடிக்கு 40,000 கன அடி தண்ணீர் செல்கிறது. கடலூர் மாவட்டதில் பல்வேறு பகுதிகளில் கரை ஓரம் உள்ள கிராமங்களில் பெரும்பாலன பகுதிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர். இந்நிலையில் பண்ருட்டியில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கனமழையினால் பல குடியிருப்பு பகுதிகளை மழை நீர் சூழ்ந்துதேங்கி உள்ளது மேலும் பண்ருட்டி பகுதியை சுற்றி உள்ள மேல்குமாரமங்கலம், புலவனாரு , கோழிப்பாக்கம், மற்றும் பல்வேறு பகுதிகளில் விவசாய நிலங்களை மழை மற்றும் வெள்ள நீர் சூழ்ந்து உள்ளதால் விவசாயிகள் வேதனை தெரிவித்து உள்ளனர். இதன் காரணமாக பண்ருட்டியில் உள்ள ஆர்எஸ் மணி நகரில் வசிக்கும் சந்திரன் என்பவருடைய இரண்டரை வயது குழந்தை சுதேசமித்திரன் வீட்டு வாசலில் விளையாடிக்கொண்டு இருந்தபோது வீட்டு வாசலில் தேங்கியிருந்த மழைத் நீரில் எதிர்பாராமல் விழுந்ததாக கூறப்படுகிறது, இதைப் பார்த்த சந்திரன் மற்றும் அவருடைய மனைவி மற்றும் உறவினர்கள் உடனடியாக சிறுவனை மீட்டு பண்ருட்டி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்தனர் . பின்னர் சிறுவனை பரிசோதித்த மருத்துவர் குழந்தை சுதேசமித்திரன் ஏற்கனவே உயிரிழந்ததாக தெரிவித்தார். இதை கேட்ட பெற்றோர்கள் கதறி அழுதனர். மேலும் அரசு அதிகாரிகளின் அலட்சியத்தால் குடியிருப்பு பகுதிகளில் தேங்கி உள்ள மழை நீரை வெளியேற்ற எந்த ஒருநடவடிக்கை எடுக்காமல் இருந்ததே தற்போது குழந்தை உயிரிழக்க காரணம் என்றும் உறவினர்கள் குற்றம் சாட்டினர். வீட்டின் வாசலில் தேங்கி இருந்த மழை நேரில் மூழ்கி இரண்டரை வயது சிறு பிள்ளை உயிரிழந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## கடலூர்:நெற்பயிர்களுக்கு காப்பீட்டு தொகை வழங்கக்கோரி

# விவசாயிகள் தர்ணா



குமராட்சி அருகே உள்ள சர்வராஜன்பேட்டை, திருநாரையூர், எடையூர், சிறகிழந்தநல்லூர், காட்டுக்கூடலூர், லட்சுக்குடி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கடந்த 2020 ம் ஆண்டு சுமார் 3 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்திருந்தனர். மேலும் விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்திருந்த பயிர்களுக்கு காப்பீடு செலுத்தியிருந்தனர். இந்த நிலையில் கடந்த ஆண்டு இறுதியில் பெய்த தொடர் கனமழையால் நெற்பயிர்கள் அனைத்தும் மழையில் மூழ்கி சேதமாகின. இதில் சுற்று வட்டார பகுதி விவசாயிகளுக்கு காப்பீடு தொகை கொடுக்கப்பட்ட நிலையில், சர்வராஜன்பேட்டை உள்ளிட்ட பகுதி விவசாயிகளுக்கு மட்டும் இதுவரை காப்பீடு தொகை வழங்கப்படவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு காப்பீடு தொகை வழங்க வலியுறுத்தி மனு அளிப்பதற்காக நேற்று காலை கடலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு திரண்டு வந்தனர். அப்போது அங்கிருந்த போலீசார், விவசாயிகளை கலெக்டர் அலுவலகத்திற்குள் செல்ல விடாமல் தடுத்தனர். இதனால் விவசாயிகள் அனைவரும் கலெக்டர் அலுவலக நுழைவு வாயில் முன்பு அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டனர். இதுபற்றி அறிந்து வந்த துணை போலீஸ் சூப்பிரண்டு கரிகால் பாரி சங்கர், விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் அவர்களை சமூக இடைவெளியை கடைபிடித்து சென்று, கலெக்டரிடம் மனு அளிக்கும்படி கூறினார். இதனை ஏற்றுக்கொண்ட விவசாயிகள் தர்ணாவை கைவிட்டு, கலெக்டர் பாலசுப்பிரமணியத்தை சந்தித்து, கோரிக்கை மனுக்களை அளித்துவிட்டு கலைந்து சென்றனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# கடலூரில் திறக்கப்பட்ட காரல் மார்க்ஸ் சிலை




கடலூரில் காரல் மார்க்ஸ் சிலை திறப்பு விழா நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு சிலையை திறந்து வைத்த, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் பிரகாஷ் காரத் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது பேசிய அவர், மூன்று வேளாண் சட்டங்கள் திரும்ப பெறப்படும் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார். இது இந்திய விவசாயிகள் போராட்ட வரலாற்றில் சிறப்பு மிக்க நாளாகும். அகில இந்திய விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைமையில் நடந்த போராட்டத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இது வரலாற்று சிறப்புமிக்க நாளாகும். நாடாளுமன்றத்தில் இந்த 3 சட்டங்களையும் திரும்பப் பெற மாசோதாக்கள் தாக்கல் செய்யப்படும் என பிரதமர் அறிவித்துள்ளார். அதேநேரம் இந்த மாசோதாக்களை நிறைவேற்றும்போது அனைத்து பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதார விலை உத்தரவாதப்படுத்தப்படும் என்று அரசு அறிவித்திருந்தது. இதற்கு சட்டப்பூர்வ ஏற்பாட்டை உறுதிப்படுத்தவேண்டும். அதுமட்டுமல்லாமல் விவசாயிகளுக்கு விரோதமான மின்சார மசோதாவையும் ஒன்றிய அரசு திரும்ப பெறவேண்டும். மக்கள் சந்திக்கும் மற்றொரு முக்கியமான பிரச்சினை பெட்ரோல், டீசல் விலை உயர்வாகும். மத்திய அரசு சமீபத்தில் பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியை குறைத்தது . பெட்ரோல் மீதான கலால் வரியில் லிட்டருக்கு 5 ரூபாயும் , டீசல் மீதான வரியில் 10 ரூபாயும் குறைப்பதாக அறிவித்தது . இது ஒப்புக்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். இந்த விலை குறைப்பு பொதுமக்களுக்கு பயன்படவில்லை. காரணம் தொடர்ந்து இப்பொருட்கள் மீதான விலை உயர்ந்து வருகிறது . பெட்ரோல், டீசல் மீதான கூடுதல் வரிகளை ஒன்றிய அரசு திரும்பெற வேண்டும். மேலும் பெட்ரோலிய பொருட்கள் மீதான வரியை மத்திய, மாநில அரசுகள் பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்போது தான் பெட்ரோல், டீசல் விலை குறையும். ஆனால் தற்போது ஒன்றிய அரசின் நடவடிக்கையால் மாநில அரசுகள் கணிசமான வரியை இழந்து தவிக்கின்றன. அதனால் மேலும் வரியை குறைக்குமாறு மாநில அரசுகளை ஒன்றிய அரசு நிர்பந்திப்பது நியாயமல்ல. இதில் உண்மையான குற்றவாளி ஒன்றிய அரசுதான். மேலும் சிறுபான்மை மக்கள் மீதான தாக்குதலை கண்டித்தும், அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க கோரியும் வருகிற டிசம்பர் 1ஆம் தேதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் அகில இந்திய ஆதரவு நாள் கடைபிடிக்க உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார். அப்போது அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ராமகிருஷ்ணன், மத்திய குழு உறுப்பினர் வாசுகி, மாவட்ட செயலாளர் ஆறுமுகம், மாநிலக்குழு உறுப்பினர் மாதவன் , மூசா ஆகியோர் உடனிருந்தனர் .

## சிதம்பரம்:மாற்று இடம் வழங்கிய பிறகு

# ஏழை மக்களின் வீடுகளை அகற்ற வேண்டும்-எம்.எல்.ஏ மனு



சிதம்பரம் நகரத்திற்குட்பட்ட இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளி எதிரில் உள்ள தச்சன் குளத்தினையொட்டிய கரை பகுதியில் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக 80 க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்கள் வீடு கட்டி வசித்து வருகின்றனர். தற்போது வருவாய்த்துறை மற்றும் சிதம்பரம் நகராட்சி நிர்வாகத்தின் மூலம் வீடுகளை அகற்றப்படும் என்று அறிவிப்பு செய்துள்ளனர். இப்பகுதியில் வசிக்கும் மக்கள் மிகவும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்த கூலித்தொழிலாளர்கள். தற்போது நிலவி வரும் கரோனா பெருந்தொற்று மற்றும் வடகிழக்கு பருவமழை கடுமையாகப் பெய்து வருவதால் பொதுமக்கள் பெருத்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். மேலும் நகர் புற உள்ளாட்சித் தேர்தல் விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. ஆதலால் இப்பகுதியில் வசிக்கும் 80 குடும்பங்களுக்கும் மாற்று இடம் வழங்கிய பின் வீடுகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக கால அவகாசம் வழங்கிட வேண்டும் என தட்சன் குளப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுடன் சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர் கே. ஏ பாண்டியன் செவ்வாய்க்கிழமை சிதம்பரம் கோட்டாட்சியர் ரவியைச் சந்தித்து மனு அளித்துள்ளார். இவருடன் மாவட்ட கழக அவைத்தலைவர் எம். எஸ். என் குமார், மாவட்ட கழக பொருளாளர் தோப்பு கே. சுந்தர், நகர அம்மா பேரவை செயலாளர் சி. கே. சுரேஷ்பாபு, மாவட்ட அணி பொருளாளர் சங்கர், வார்டு செயலாளர் வீரமணி, நகர இளைஞரணி செயலாளர் கருப்பு ராஜா மற்றும் நிர்வாகிகள் பொதுமக்கள் என அனைவரும் உடனிருந்தனர்.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969